## போராட்ட வரலாறு – ஆற்ற வேண்டிய கடமைகளை

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ மாநாடு சொல்லும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, டிச. 30 –

போராட்ட வரலாறு மற்றும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளை பல்லடத்தில் நடைபெறும் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ மாநாடு சொல்லும் என்று கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டு நேற்று முன்தினம் (28.12.2025) சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**தமிழ்நாட்டில் உள்ள நம் சகோதரிகள் அனைவரும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள்தான்! திராவிட இயக்கத்தால் தலைநிமிர்ந்து வெற்றி நடை போடும் போராட்ட வரலாற்றையும் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளையும் நாளை (29.12.2025) பல்லடத்தில் நடைபெறும் #வெல்லும்_தமிழ்ப்_பெண்கள் மேற்கு மண்டல @DMK Womens Wing மாநாடு சொல்லும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



ஈரோடு மாநகராட்சி ஈ.எம்.எம். முக்கிய தெரு, ஈரோடு முதல் சென்னிமலை வரையிலான சாலை பகுதியில் 1/2 1/7 மற்றும் 2/0 2/3 இரண்டு வழி சாலையினை நான்கு வழிச் சாலையாக மாற்றுவது குறித்து வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில், மாநில இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு கும்பகோணம் ராயா அனுக்கிரஹா திருமண மண்டபத்தில் மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது. இந்த முகாமை தமிழ்நாடு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாநிலங்களவை உறுப்பினர் சு.கல்யாணசுந்தரம், முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், தாட்கோ வாரிய தலைவரும், மாநில இளைஞரணி துணைச் செயலாளருமான ந.இளையராஜா ஆகியோர் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்வில் சு.ப.தமிழழகன், ஜெ.சுதாகர், சுந்தர.ஜெயபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை!

# விராலிமலையில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

### எஸ்.எம்.மதிவதனி – அஞ்சுகம் பூபதி சிறப்புரை!

புதுக்கோட்டை, டிச. 30 –

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் விராலிமலை சட்டமன்ற தொகுதி சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் விராலிமலையில் 20.12.2025 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. விராலிமலை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.இளங்குமரன், விராலிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் மு.பி. ம.சத்தியசீலன் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். திராவிடர் கழக துணை பொதுச் செயலாளர் எஸ்.எம்.மதிவதனி, விராலிமலை தொகுதி பொறுப்பாளர் துணை மையம் அஞ்சுகம் பூபதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் நிகழ்வில் கழக விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் த.சந்திரசேகரன், கழக விவசாய அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மாவட்ட அவைத் தலைவர் அரு.வீரமணி, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் மு.பி. மணி, ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ். சந்திரன் தென்னலூர் எம். பழனியப்பன், ஆர்.எஸ்.எல். மாரிமுத்து, எம்.கோவிந்தராஜன், புதுக்கோட்டை தெற்கு மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ், பொதுக்குழு உறுப்பினர் எம்.செந்தில் குமார், பேரூர் கழகச் செயலாளர்கள் வை.விஜயகுமார், எம்.எஸ். ஏ.முகம்மது ரிஷா, ஏ.பி.ஆர். ராஜாங்கம், மா.செந்தில்நாதன், ந. வீராசாமி, இரா. பாலசுப்ரமணியன், கே.வி கருப்பையா, என்.எஸ்.கே. நல்லதம்பி, ஏ.முத்துசாமி, பெ. குமார், மு.பழனிச்சாமி, எம்.பி. ஜெயபால், ஏ.செல்வம், கவிஞர் சௌமா, எம்.ஆர்.அன்பழகன், சு.சிவக்குமார், மா.பாலசுப்பிர மணியன், த.ரெங்கராஜ், எம்.சுப்பையா, அ.ராஜா, கோ.கணேசன், எம்.பாலமுருகன், கே.ரெங்கராஜ், எஸ்.பவுல்ராஜ், சங்கீதா, எஸ்.ராதா, வாட்ச் ஆர்.கண்ணன், எம்.பொன்னம்பலம், வழக்கறிஞர் சந்திர ஜோதி உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

முடிவில் விராலிமலை மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி.ஐய்யப்பன் நன்றி கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்டம் பனமரத்துப்பட்டி ஒன்றியம், அமானி கொண்டலாம்பட்டி ஊராட்சியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் சிறப்பு முகாமை மாவட்ட கழக செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது மாவட்ட துணை செயலாளர் க.சுரேஷ்குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், ஒருங்கிணைப்பாளர் காட்டூர் ஜெ. சங்கர், உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூரில் அமைப்புசாரா கட்டுமான தொழிலாளர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சிப் பெற்ற தொழிலாளர்களுக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் சான்றிதழ்கள் வழங்கி கழக அரசின் திட்டங்கள் குறித்து சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில தொ.மு.ச. துணை பொதுச் செயலாளர் மோகன், தொழிலாளர் உதவி ஆணையாளர் மாதேஸ்வரன், கிருஷ்ணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன், பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன் மற்றும் அமைப்புசாரா கட்டுமான நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஏராளமானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

